உ

கடவுள் துணை.

விவேகவிளக்கக் கீர்த்தனம்.

ஸ்ரீ கிருஷ்ணவிலாசத்தில்
புன்னைமரச்சேவை கீர்த்தனம்

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

97

கடவுள் துணை.

விவேகவிளக்கக் கீர்த்தனம்.

இ-ம்-முகாரி-அடதாளம்-கண்ணிகள்.

எதுவேணுங்கேள்மனமே பாவிமனமே
உனக் கெதுவேண்டாம் சொல்மனமே

கதியென்றுகணநாதன் துதிசெய்துபணிந்திட
கர்மவினைகளறுமே அயன்
விதியன்றிவேறொரு சதிசர்ப்பனைகள்யாவும்
வேரறுந்தோடிடுமோ — எது

நன்மார்க்கமாகவே யென்னாளுமிருந்திட
நாதனருள்வேணுமா இல்லாமல்
துன்மார்க்கமாக வலைந்துதிரிந்திடும்
துஷ்டருறவுவேணுமா — எது

சோதிசுடர்ப்பொருள் ஆதிசிவகுரு
சண்முகனருள்வேணுமா இல்லாமல்
மாதரைக்கைகோர்த்து மண்டலந்திரிகின்ற
மடையருறவுவேணுமா — எது

பையரவமணிந்த பக்தரட்சகரெனும்
பரமதயாளன்வேணுமா இல்லாமல்

மையிட்டுக்கண்காட்டி ஜாடைகள்செய்திடும்
மங்கையுறவுவேணுமா எது

மச்சாவதாரஞ்செய் தீனரட்சகனெனும்
மால்மருகோன்வேணுமா இல்லாமல்
பிச்சையென்றுவருவோரை மயிர்பிடித்தடித்திடும்
பேயருறவுவேணுமா எது

ஆடையளித்துடல் அன்னங்கொடுத்திடும்
ஆண்டவனருள்வேணுமா இல்லாமல்
ஜாடைகள்செய்து கண்ணால்மயக்கிடும்
தாசியுறவுவேணுமா எது

கனிமாங்கனிக்காகப் பூவலம்வருங்கதிர்
காமன்கருணைவேணுமா இல்லாமல்
அனியாயமாயேழைகள் மேற்பகைதொடுத்து
அலங்கோலஞ்செய்பவன்வேணுமா எது

தன்மானம்பிறர்மானம் என்றுஎன்னாளும்
தற்காத்திடுபவன்வேணுமா இல்லாமல்
சன்மார்க்கமில்லா தலைந்துத்திரிந்திடும்
சண்டாளருறவுவேணுமா எது

எந்தவகையிலும் மனைவிமக்களைக்காப்பாற்
றீடேற்றும்வகைவேணுமா இல்லாமல்
சொந்தமனைவிக்குச் சோறுதண்ணீரிடாமல்
சோரமனைவிவேணுமா எது

ஐயன்திருவடியை யனுதினந்தொழுதிடும்
அடியாருறவுவேணுமா இல்லாமல்
பொய்ச்சாக்ஷிசொல்லித்தம் வயிர்வளர்த்துத்திரியும்
பொய்யருறவுவேணுமா எது

சண்முகனடியினைச் சர்வகாலம்பூசித்து
சன்மார்க்கம்பெறவேணுமா இல்லாமல்
வண்மையுடனொருவன் கொடுப்பதைத்தடுத்திடும்
வஞ்சகருறவுவேணுமா எது

அன்னைதந்தையர்களை யாதரித்தாண்டிடும்
அடியாருறவுவேணுமா இல்லாமல்
முன்னைப்போகவிட்டு பின்புரணிபேசிடும்
மூடருறவுவேணுமா எது

அந்திசந்தியநுஷ் டானஞ்செபித்திடும்
ஆசானருள்வேணுமா இல்லாமல்
வந்துமுகங்காட்டி விந்தைநடனஞ்செய்திடும்
பாவையுறவுவேணுமா எது

தேவாலயங்களும் தேசங்கள்தான்திரியும்
தேவரடியார்வேணுமா இல்லாமல்
மாதரைக்கண்டு மயங்கித்திரியும்
மடையருறவுவேணுமா எது

மதியணிசெஞ்சடை வள்ளலருள் முருகன்
மலர்ப்பாதந்தான்வேணுமா இல்லாமல்

சதிசெய்துமாதர்கள் மதியைமயக்கும்பாழும்
 தையலுறவுவேணுமா எது

வட்டமதிவதன வள்ளிநாயகிபாகன்
 மலர்ப்பாதந்தான்வேணுமா இல்லாமல்
பட்டப்பகற்பொன்னை தட்டிப்பறிக்குங்கொடும்
 பாவியுறவுவேணுமா எது

புள்ளிமயிலேறும் புனிதவடிவேலன்
 புண்ணியன்பாதம்வேணுமா இல்லாமல்
கள்ளுண்டுசுள்ளுண்டு தள்ளாடிவெறிகொண்ட
 கசடருறவுவேணுமா எது

சுந்தராஞ்சித குஞ்சரிபாகன்
 மலர்ப்பாதந்தான்வேணுமா இல்லாமல்
தந்தைதாய்ஆஸ்திதன்னை நிந்தித்தழித்திடும்
 டம்பருறவுவேண்டுமா எது

மாட்சிபெருகிய பாலனுறையும்
 மாதவன்பதம்வேண்டுமா இல்லாமல்
தாட்சிபெண்ணுமல் அரசாட்சிதனிலேபோய்
 பொய்சாட்சிசொல்வோன்வேணுமா எது

அத்திமுகவனை நித்தந்துதிசெய்யும்
 அடியாருறவுவேண்டுமா இல்லாமல்
சிற்றின்பத்தினில் உழன்றுதிரிந்திடும்
 தீயருறவுவேண்டுமா எது

ஆறுமுகம்படைத்த ஐயன்றிருவடியை
    அனுஷ்டித்தல்தான்வேண்டுமோ இல்லாமல்
தாறுமாறாகத் திரியும்தருதலையைப்போல்
    சண்டாளருறவுவேண்டுமோ எது

உத்தமருடன்சேர்ந்து உண்மையைப்பாவித்து
    உலகநடைவேண்டுமோ இல்லாமல்
மத்தகஜம்போல் கொழுத்துத்தலைமீதில்
    மண்போட்டுக் கொள்ளவேண்டுமோ எது

எச்சமயத்திற்கும் எங்கும்நிறைவுள்ளோன்
    ஏகன்பதம்வேண்டுமோ இல்லாமல்
இச்சையில்லாமல் சிவபூசைசெய்திடும்
    ஈனருறவுவேண்டுமோ எது

ஆலம்போலச்சீறி காலன்பாசந்தனிற்
    கட்டுண்டுழலவேண்டுமோ இல்லாமல்
தாலந்தனையளந்த மால்முருகேசன்மலர்ப்
    பாதபங்கயம்வேண்டுமோ. எதுவே

விவேகவிளக்கக் கீர்த்தனம்

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீகிருஷ்ணவிலாசத்தில்

புன்னைமரச்சேவை கீர்த்தனம்.

——(*)——

பல்லவி.

மாதேயசோதையே கேளம்மா உன்மகன்செய்த
சூதோநான்சொல்லுகிறேன் கேள் தாயே (மா)

அநுபல்லவி.

போதும்போதுமொரு சூதுவாதுந்தெரி
யாதகிருஷ்ணன்வெகு சாதனமென்றான் (மா)

சரணங்கள்.

பட்டிக்கதவைத்திறந்துவிட்டான் பாலூட்டுதென்று
இட்டிப்புருஷரைக்கூப்பிட்டான் அவரங்கேபோனார்
கட்டியெங்களைவிட்டான்
எட்டியவுரிதனில் கட்டியதயிர்வெண்ணை
சட்டியெல்லாங்கொள்ளை இட்டாண்டியம்மா (மா)

பெருகி நீராடும்வேளைக் கண்டான்
சேலையைவாரி
மரமீதிலேறி ஒளித்துக்கொண்டான்
துரையேசேலை
தரவேண்டுமென்றுநாங்கள் கேட்டோம்
நீங்களொல்லோரும்
கரைமீதில்வந்தால்தாரே னென்றான்
நீர் எங்கள் மானத்தைக்
காப்பாற்றவேண்டுமென்று கேட்டோம் (மா)

மற்றுமொருகன்னியிடத்தில் தானும்
படுத்திருந்தால்
மெத்தைமீதினில் வந்திருந்து
சண்டாளப்பாவி
விந்தைகளென்ன செய்தானோ
நாங்களென்னசெய்வோம்
நித்தியந்தங்களை தொடுத்தானே
சுற்றிலும்மாதர்கள்
இத்தனைபேரிலே பத்தினியொருத்தி இல்லையே. (மா)

புன்னைமரச்சேவை கீர்த்தனம்

முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பஜனைக்கீர்த்தனை.

இராகம்-அசாவேரி-ஆதிதாளம்-பல்லவி.

பேதைநெஞ்சே யிந்த ஜென்மமெடுத்ததுநான்
பெற்றபலன்போதும் அனுபவித்தசுகம்போதும்

அனுபல்லவி

மாதர்மக்கண்மனை மீதிலாசைவைத்த காதலெல்லாமெங்கேபோச்சே, எமதூதர்கையிற் சிக்கலாச்சே கணப்போதி லொடுங்கிப்போச்சே மூச்சே ஈதென்ன பேச்சே. (பே)

மெத்தப்பருத்த சடலத்துடன்மலர் மெத்தையின் மேல்படுத் தாயே கானைபற்றியெரியுதே தீயே அந்தச் சித்திரத்தையறி யாயே. (பே)

சண்டநமன் வந்து தெண்டனைசெய்துன்னைக் கொண்டுபோகவரும் போது அவனைக் கண்டுதடுப்பவ ரேது அதிலுண்டோபலனுனக் கோது வெகுசூது (பே)

தீராப்பிறவிகள் வாராமலேஸ்ரீமந் நாராயணாவென்றுசொல்லும் பால்மாராமலே வந்துநில்லும் அருள் நேராகவேவந்து புல்லும் மாய்கைவெல்லும் (பே)

இ-ம்-புன்னாகவராளி-தோடி-சாப்பு-தாளம்-பல்லவி.

பிறந்தும்கஷ்டமாச்சே பூமியிலிருந்துங்கஷ்டமாச்சே-சிறந்தவேதியர்சூழ் ஸ்ரீபெரும்பூதூரில் வீற்றிருக்கும்அதிபதியைத் தினந்துதியாமூடனை (பிற)

அரிதாசர்களைக்கண்டு பிரியமுடன் ஆதரிப்பதை விண்டு முரியனைப்போலவரை முன்பின் எண்ணுமல்வைது திரியும்பாதகனவன் கருவினிலழியாமல் (பிற)

மனைவிதன்னை விட்டு காமமெனும்மயக்கத்தில் வீழ்ந்துகெட்டு அனைவோரிகழவேபின் அலைந்து நாய்போற் றிரிந்து தினமும் பிறர் மாதரை புணர்ச்சிசெய் திருந்த துரோகி (பிற)

அருமறையமரர் சித்தர்முனிவர்கள் துதிக்கவெண்ணுதிருவேங் கடமுடையான் திருவடிக் கன்பனுன கருணைராமாநுஜரைக் கருத்தில்நினையாப்பாவி (பிற)

இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்-பல்லவி.

எத்தனைநாளிருந்தாலுங் காயம்
இருப்பதுசதமா யானிருப்பதுசதமா

அத்திமுறை யிடவாரஸ்ரீ அரியையனு தினமுங் கொண்டாடும் அவர்பாதமே கெதியென்று தேடும்-அவனையே பாடும் (எத்)

நீர்மேற்குமிழிபோலவும் வாழ்வை நிச்சயமென்று நம்பாதே உயர் அச்சுதனைமறவாதே புலம்பாதே (பில)

வேசிகள் மீதினிலாசை மிகவைத்துநாசமடைந்து போகாதே பாசபந்தமதி லழுந்தாதே நீ மோசம்போகாதே (எத்)

ஆசையுடன்றிரு வேங்கடவன் பணியும் ஐயனுக்
கேநாள்தோறும் அதுசெய்பவே நீமனத்தேறும் நல்ல
வழியைக்கோரும் (எத்)

இ-ம்-புன்னுகைவராளி-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

உனைநம்பினேன் சேஷவதாரா என்மேல்
மனம்வைத்தாளுவையிப்போ ஸ்ரீபாஷ்யகாரா உனை
வானவர்பணியும் பூதூரா என்மேல்
மர்மமாகுமோவைஷ்ணவ மதத்தோரா உனை
கூரேசர்பணியும்பொற் பாதா எந்தன்
குறைகேட்டருள்செய் யுனக்குத்தகாதா உனை
தினதயாளா குணாகரா சேவடி
தினந்துதிக்குமடியார்க் கருளுங்கெம்பிரா உனை
வனசரோருகநிகர் கண்ணா கோதை
மனமுவந்தழைத்திட்ட நங்கோயிளண்ணா உனை
திரிதண்டநாதாவாராய் என்றன்
தீராப்பிறவித் துயர்தீர்க்கக் கண்பாராய் உனை
எருபனல்வர்க்கருள் செய்யே நற்புவியில்
எளியேன்வருந்தென்னிடர் தீர்க்கவொண்ணாதா உனை
தொழிற்செய்யும்ரவி தேஜோமயமே-பருமோ
வாய்திறந்தூமையைப் பேசச்செய்த எதிராஜா உனை
பரமபதநிவாசகுருவே தரும்
பவசாகரங்கடந்துன் பதந்தந்தருளே உனை

இ-ம்-தேசிகதோடி-மிசுரதாளம்-பல்லவி.

தாமோதரா நீயேகதி தற்காத்
தருள்செய்வாய்ததி
காமாதிகளனைத்தும் போக்கிக்காராய்-சீராய்
காரணநாரண தாமோதரா

வாரணமுனி யழைக்கவந்த மாது திரௌபதைக்
கபயந்தந்து ஆரணன்துதிசெய்திடுமெங்களையா மெய்யா
ஆதியே சோதியே தாமோதரா

செனனமரண வாதனைநீக்கித் திருவடிகளுக் குடி
யைத்தாக்கி தனதுமனதின் குறையைப்போக்கித் தாதா
வாதா சாமளவாமன தாமோதரா

வாசவன்புகழ் காஞ்சிபுரிவாசா வரதராசா பாச
முரானே திருவேங்கடதாசா போஷாபாலனே லோல
னேடா தாமோதரா

இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்-பல்லவி.

இருந்தென்னபோயென்ன இவ்வுலகத்தில்
இருந்தென்னபோயென்ன

நிரந்தரமெக்கருள்தருமந்த ராமமந்திரமதை நினை
வீணில்மறந்திருக்க பாவிகள் இரு
ராகமதையறுத்து ராமனடிவணங்கும்
பாகவதர்பாதங்கள் பணியாதபாவிகள் இரு
தேகமத்தினாலே தெருவெங்குந்திரிந்தும்
யோகிகளிடமனம்நோகப் பண்ணும்பாவிகள் இரு

ஜெகத்தினிலிருக்குஞ் சர்ச்சனர்களைப்பகைத்து
கொண்டகத்தினாலழியும் பொல்லாக்கொடியபாவிகள்
பேசாவிடும்புகளைப்பேசி ஸ்ரீபராங்குச
தாசர்களைப்பழிக்குஞ் சண்டாளப்பாவிகள் இரு

இ-ம்-கேதாரகௌளம்-ஆதிதாளம்-பல்லவி.

இந்தமட்டும்விஷயரத்துரையான்
இருந்ததுபோதும் யானிருந்ததுபோதும்

சந்ததமுந்தில்லைத் தாண்டவராயன் சந்நிதியிற் கூத்தாடும் பொன்னம்பலமேயென்றுபாடும் அதைத் தேடும் இந்த

பெண்டுபிள்ளைகள் சோற்றுப்பாளயம் பெருகிய சந்தையின்கூட்டம் அதிலுனக்கென்னகொண்டாட்டம்பொம்மலாட்டம் இந்த

அற்பசுகத்தினிற் காசைபட்டு பிரமானந்தத்தை மறவாதே அம்மை வயிற்றினிற் பிறவாதே இறவாதே இந்த

மல்லிகைமுல்லைகள் தாரோமென்று சில மாதரைக் கண்டுதொடர்ந்து அவள் பாதங்கதிமென்று கிடந்து துறவடைந்து இந்த

அத்தியதிபவர்க் காமவிகாரங்கள் அன்னமயமது தோஷம் அதிலாசைவைத்தால்வெகுமோசம்பவநாசம் இந்த

தேசங்கடோறு மலைந்துதிரிந்து தேடிப் புதைத்து வைத்தாலும் நாளை கூடவராதொருக்காலும் நிஜமொன்றுலும் இந்த

ஏட்டினிலெழுதத் தொலையுமோ நாம் எடுத்தகன்ம சம்சாரம் கரைகாணவோ சுமைபாரம் இதுவென்ன கோரம் இந்த

அண்ணலெனுங்கோ பாலகிருஷ்ணன் தொழும் ஆண்டவன்கோயிலிற் செல்லுதில்லைத் தாண்டவராயனைப் புல்லுமாயைவெல்லு இந்த

இ-ம்-பைரவி-சாபுதாளம்-பல்லவி

ஓம் ஓம் ஓம் ஓம் பிரணவசொரூபனே
ஆதரவாகியஐயன்றிருவடியை அனுதினமும்வந்து
துதித்துநினையடி மனமே ஓம்

ஆயிரத்தெட்டண்ட மோர்குடைக்குளாண்ட
சூரனைமறித்தும்வளைத்தும் வேலாவிருபிளவாய்
செய்தவுக்கிரனே ஓம்

நாதாந்தநாதருக்கு நாதபிர்மமாகிய
நாதாந்த வேதாந்த சித்தாந்த சொரூபனே ஓம்

ஞானசொரூபருக்கு ஞானமொழியுரைத்த
ஞானனேபரிபூரணனே நாரணன்றிருமகனே ஓம்

வேதத்தின்முடிவிலும் தேடியுங்காணாத
வேலனேநிர்மலனே மெய்ஞ்ஞானதேசிகனே ஓம்

இ-ம்-அசாவேரி-அடதாளம்-பல்லவி.

அருள்புரியாயோ வரதா அருள்புரியாயோ
அஞ்சலெனஓடிவந்தெனை யாதரியாயோ அ

வாய்திறந்தென்னேடொரு வார்த்தைசொல்லாயோ
வஞ்சமேசெய்தேனென்று மனமிரங்காயோ அ

அன்னையும்நீதந்தையும்நீ குருதெய்வமும்நீயே
ஆபத்துவேளைதனி லாதரிக்கலாகாதோ அ

பஞ்சவர்க்குத்தூதுசென்ற பரமதயாளாபட்சம்
என்மேல்வைத்தடிமையைப் பார்க்கலாகாதா அ

சங்குசக்ரதரமுகுந்தா தண்டுளபமார்பா
சமயமறிந்துதவிசெய்வாய் சாமளரூபா அ

இரணியனும்மாராதீரா எழுமங்கைநாதா இந்த
ஏழைக்கிரங்காதிருந்தா லுலகமேசாதா அ

விரைசெறியுங்காஞ்சிபுரி வாய்ந்தவரதாதிரு
வேங்கடதாசன்துதி செய்யும்ஜெகதீசா அ

இ-ம்-நாத ாமக்கிரியை-ஆதிதாளம்-பல்லவி.

இன்னமும்வர்மஞ் செய்யலாகுமோ
உமதடிமைக் குழந்தையின்மேல் இ

மன்னர்புகழுந்திரு வரங்கந்தன்னில்வாழும்
வாசனே யரங்கேசனே இ

வேதமுனிவர்தன்றேவிதனைக்கண்டு வாசவனெனு
ங்கோனுங் காதலுடனரன்மேவ மனங்கொண்டு நீதமுட

ன்சாபமோ தகலிகைநின்ற சிலையதனை யன்றுபெண்ணு கச்செய்தே இ

பாசபந்தமெனு மாசைதனை யோட்டித் திருவருள முதூட்டி விரதனுகவேசெய்தவனைப்பாராட்டி நிசன்புகழுஞ்சகதீசனே மங்கைநேசனே பவநாசனே இ

மாதவமுனிவர்தேவர் துதிபாலாதிரு வேங்கடதாசன் ஓதுந்தமிழ்க்கருள் செய்திடுங்குணசீலா வேதமுதல் யாவும்துதிசெய்யும் பிரதாபமோதும் பாற்கடல்மேவிய தாதா இ

இ-ம்- துசாவந்தி-ரூபகதாளம்-பல்லவி.

கண்டேன்கண்டேன் பால்வெண்ணே
யுண்டோனைக் காவனைவென்ற கா

அநுபல்லவி.

அண்டத்திற்றேவர்கள் தாண்டர்களாகிய
நின்றுபஜனைசெய்யும் புண்டரீகநாதனை கண்

சரணங்கள்.

பூமியில்பத்தர்கள் சாபத்தைத்தீர்க்காதமாமனை
வதைசெய்ததாமோதரனைக் கண்
எதுகுலத்தோர்களுக் குதவாபாவிகள்
மதங்களைத்தொலைத்த வென்பத்மநாபனைக் கண்
ஈசன்பரமபக்தவாசன் ரங்கதாசருக்கு
நேசருக்மணிமனோ லயனைநேராகக் கண்

ஆக கீர்த்தனைகள் கக முற்றிற்று.